டிருக்கமாட்டார்கள். ஆனால் 12 தொழிலாளர்களில் 6 பேர்கள் மீண்டும் காலியிடங்களில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். இன்னும் ஆறு பேர்கள் டெம்பரரியாக எப்போதெல்லாம் வேகன்சி வருகிறதோ அந்த நேரங்களில் அவர்களை அமர்த்திக் கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த முயற்சிகள் எடுத்துக் கொண்டு வரப்படுகின்றன. இப்போது நிதிநிலைமை நன்றாக இருக்கிறது என்று தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நல்ல முறையில் மறு பரிசீலனை செய்யப்பட்டு பழி வாங்கவேண்டுமென்ற நோக்கம் இல்லாமல்—அதிகாரிகள் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியிருக்குமானால் நிச்சயமாக, கண்டிப்பாக அதைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் மீண்டும் அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படி இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து ஆராயப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : நிதி நிலைமை காரணமாக அந்த ஆறு பேர்களை நிறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நிதி வசதி உள்ள பல நகராட்சிகளில் ஊழியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அங்கே போதிய அளவு ஊழியர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பொறுத்து எழுப்பப்பட்ட கேள்வி. இன்னும் கூடுதலாக ஆள்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வினா மூலம் அந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். இப்போது இருக்கக் கூடிய நிலைமையில் அங்கே போதும் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு நகரத்தில் அப்படிப் போதவில்லை என்று உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவிப்பார்களேயானால் அது குறித்து நிச்சயமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

பர்கூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 981—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூரில் உள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் பெண் டாக்டர் போடுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) ஒரு மருத்துவ அலுவலரை நியமிக்க ஒட்டுமொத்த செயற்குறிப்பு ஒன்று மருத்துவப்பணி மற்றும் குடும்பநலத் துறை இயக்குநரிடம் ஆய்வில் உள்ளது.

திரு. செ. சிவகாமி: அந்த மருத்துவமனைக்கு எஸ்டிமேட் எவ்வளவு? எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அது மருத்துவ மனை அல்ல, மருந்தகம். இப்போது அது ஒரு டிஸ்பென்சரியாக இருக்கிறது. படுக்கைகள் கூட அங்கே இல்லை. ஒரே ஒரு மெடிக்கல் ஆபீசர், டாக்டர் கே. நடராஜன் அங்கே இருக்கிறார். அதை ஒரு பெரிய மருத்துவமனையாக ஆக்க உத்தேசம் உண்டா, எப்போது என்று கேட்கிறார்கள். இப்போது அந்த உத்தேசம் இல்லை. இன்னும் அதன் அருகில் பலயிடங்களில் மருத்துவமனைகள் இருக்கின்றன. அதை ஒரு மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று ப்ரொபோஸல் வரும்போது அதற்குரிய எஸ்டிமேட்டை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 9-40]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். சுற்றிலுமுள்ள 15 மைல் தூரத்தில் மருத்துவ மனை இல்லை. அங்கே பிரசவம் பார்ப்பதற்கு பெண் டாக்டர் இல்லை. ஆகவே, குழந்தை வளர்ச்சி, பிரசவம், இன்னும் மற்ற அத்தியாவசியமான உடல் நோய்களைத் தீர்ப்பதற்காக, மருத்துவ மனையை விரிவு படுத்துவதோடு அல்லாமல், உடனடியாக அங்கே பெண் டாக்டரை நியமிப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரே ஒரு டாக்டருக்கு இடமிருக்கிறது. இன்னொரு டாக்டரை கூடுதலாக அமர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்படி 161 மெடிகல் இன்ஸ்டிடியூஷன்களிலே இன்னொரு டாக்டர் கூடுதலாக அமர்த்த வேண்டுமென்று, அதற்காக புரபோசல்களை டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் அண்டு பேமலி பிளானிங் அனுப்பியிருக்கிறார்கள். அந்த 161 மருத்துவ மனைகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.

1961 மே 5]

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசூரிலுள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லாமல் இருப்பதைப் போல், ஏறத்தாழ 161 இடங்களில் மேலும் நியமிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு பெண் டாக்டர்கள் பலர் இருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் சுகாதார அமைச்சராக இருக்கின்ற இந்தக் காலத்திலே, ஏராளமான பெண் டாக்டர்களைத் தாராளமாக நியமித்து, டாக்டர்கள் இல்லை என்று சொல்கின்ற அளவிலே நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்? திருமங்கலத்திலே இந்த மாதிரி பெண் டாக்டர் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 161 இடங்களிலே பெண் டாக்டர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. 161 இடங்களிலே கூடுதலாக, அடிஷனல் டாக்டர், ஒரு போஸ்ட் கிரியேட் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பைனான்சியல் இம்ப்ளிகேஷன்ஸ் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனாக இருக்கிறார்கள். நிதி நிலை எவ்வளவு என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதற்குரிய கணக்குகளையெல்லாம் புராபோசலாக அனுப்பியிருக்கிறார்கள். எவ்வளவு ஆகும் என்பதைப் பார்த்து, அந்த 161 இடங்களில் அடிஷனல் டாக்டர்கள் தேவைப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். சில இடங்களில் பெண் டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கு ஆண் டாக்டர்கள் தேவைப்படுகிறது. அந்த மாதிரியான புரபோசல்தான் இது. அந்த அடிஷனல் டாக்டர் வேண்டுமென்ற இந்த புரபோசல் லிஸ்டிலே இந்த மருத்துவமனை வந்திருக்கிறது. திருமங்கலம் வந்திருக்கிறதா என்று கேட்டால், அது எனக்குத் தெரியாது.

எட்டயபுரம் அரசு மருத்துவமனை.

வினா எண் 982—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையை விஸ்தரிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்பணிகள் எந்நிலையில் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.